# அற இலக்கியங்கள் காட்டும் இல்லறம்

*முனைவர் ஞா. ஜோசப் அருண்குமார்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெக்காலிபட்டி, தென்காசி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.14958691

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க கால நூல்களுக்கு ஒரு தனி சிறப்பு உண்டு. காரணம் சங்க கால மக்களின் வாழ்க்கை வேறு, அக்காலத்து நூல்கள் வேறு அல்ல. சங்ககால மக்களின் வாழ்க்கையே நூல்களாக உருபெற்றது. அப்படி வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாக பிரித்தனர். இதில் அகவாழ்க்கையில் காணப்படும் கூறுகளில் இல்லறம் குறித்த அறவாழ்வை மட்டும் இக்கட்டுரையில் கருது கோளாகக் கொண்டு, அற இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் இல்லற அறக் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து, தற்கால மக்களுக்கும் இல்லறத்தார்க்கும் உணர்த்தும் வகையில் இக்கட்டுரையானது அமையப்பெற உள்ளது.*

**முன்னுரை**

**அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்ஆயின் நன்று** - (குறள்-49)

இந்தக் குறளின் மூலம் இல்லறமே துறவறத்தை விட தலை சிறந்தது என்று கூறுகிறார் வள்ளுவர். தமிழருடைய வாழ்வில் இல்லறமும். துறவறமும் இரு கண்களாகப் போற்றப்படுகின்றன. அதேபோன்று இல்லற வாழக்கையின் சிறப்பை கூறும் வள்ளுவர்.

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை** - (குறள்-47)

என்ற குறளின் மூலம், இல்லற வாழ்க்கையில் வாழும் ஒருவன் வாழும் முறையறிந்து வாழ்வானேயானால், அவன் தவம் செய்யக் கூடிய முனிவர்களைவிட தலைசிறந்தவன் என்கிறார் வள்ளுவர். இதுபோன்ற கருத்துக்களையும் இல்லறம் மேற்கொண்டவர்க்கு ஏற்ற அறக்கருத்துக்களையும் அற இலக்கியங்கள் வாயிலாக ஆய்வதே இந்த கட்டுரையின் முக்கிய குறிக்கோலாக ஆராயப்பட உள்ளது.

**ஆய்வுத்தலைப்பு**

நீதி நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறச் செய்திகளில் இல்லறம் குறித்த செய்திகளை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு அற இலக்கியங்கள் காட்டும் இல்லறம்என்னும் தலைப்பால் இந்தக் கட்டுரையானது ஆராயப்பட உள்ளது.

**ஆய்வு எல்லை**

பதினெண் கீழ்கணக்கில் உள்ள 11 அற நூல்களில் காணப்படும் இல்லறத்திற்கு ஏற்ற அறக்கருத்துக்களை மட்டும் எல்லையாகக் கொண்டு உருவாக்கப்பட உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

அற நூல்களில் காணப்படும் பழங்கால மக்களின் வாழ்வியல் முறைகளை வெளிக்கொணர்ந்து, தற்கால மக்களுக்கு, இல்லறத்தாரின் பழக்க வழக்கங்களையும், வாழ்வியல் எதார்த்தங்களையும் உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பயன்**

சங்கம் மருவிய காலங்களில் உருவான இந்த அற நூல்களில். அந்த காலங்களில் வாழந்த மக்களின் அன்றாட வாழ்வில் காணப்படும் அறச் செயல்களை, தற்கால மக்களுக்கு எடுத்து உரைக்கும் விதத்தில், இல்லற மாந்தர்களின் நிலை, பண்பாடு, கலாச்சாரம் நாகரீகம் போன்றவைகளை நிகழ்கால மக்கள் உணர்ந்து வாழ வழிவகுக்கும் வகையில் இவ்வாய்வானது பயனுள்ள விதத்தில் பயன்பெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இல்வாழ்க்கை**

அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பாகும், அறத்தைப் போற்றி வாழ்வதே அதன் பயனாகும். இதையே வள்ளுவர்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

**- (குறள்-45)**

என்கிறார். இதேபோன்ற கருத்தைக் கூறும் இவர்,

**அறத்தாற்றின் இல்வாழ்ககை ஆற்றின் புறத்தாற்றின்**
**போஒய்ப் பெறுவத எவன்**

**- (குறள்-46)**

என்ற குறளில், இல்வாழ்க்கையில் வாழும் ஒருவன் அற நெறி தவறாது தன் வாழக்கையில் வாழ்வானேயானால் அதுவே அவனுக்கு சரியான தவ வாழ்க்கையாகும், என்கிறார் வள்ளுவர்.

ஒருவன் தன்னலம் ஒழித்துப் பிறர்நலம் பேன வேண்டுமானால், இல்லறத்தில் ஈடுபடுவதே சிறந்தது என்ற உயர்ந்த கருத்தை பிற அற இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன.

**மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை மழையும்**
**தவம் இலார் இல்வழியில்லை; தவமும்**
**அரசன் இல்லா வழியில்லை அரசனும்**
**இல்வாழ்வார் இல்வழி இல்**

**- (நான்மணிக்கடிகை-49)**

இப்பாடலில், மழை இல்லாவிட்டால் எந்த உயிருக்கும் வாழ்வு இல்லை. தவம் செய்யக் கூடியவர்கள் இல்லையென்றால் இந்த மழையும் பொழியாது, அறநெறியைக் காக்கும் அரசன் இல்லையென்றால் அந்த தவமும் இருக்காது, இல்லறத்தில் ஈடுபடக்கூடிய குடிமக்கள் இல்லையென்றால். அரசனும் இல்லை. என நான்மணிக்கடிகை நூலின் ஆசிரியர் விளம்பிநாகனார் கூறியுள்ளார். இந்த உண்மையை நாட்டு மக்களும், ஆட்சியார்களும் உணர்ந்து வாழ்ந்தால், நாடு வளம் பெற்று, நாட்டு மக்கள் மகிழ்ந்து வாழ்வார்கள்.

**இல்லறத்தில் ஈகை**

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்**

**- (குறள்-44)**

என்ற குறளில், பழிக்கு அஞ்சி சேர்த்தப் பொருளைப் பிறர்க்குப் பங்கிட்டு அளித்து பலருடன் உண்டு வாழ்பவனது சந்ததி எந்நாளும் அழியாது என்று வள்ளுவர் கூறுகிறார்.

**நடுவூருள் வேதிகை சுற்றுக் கோள் புக்க**
**படுபனை அன்னர் பலர் நச்ச வாழ்வார்**
**குடி கொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்**
**இடு காட்டுள் ஏற்றைப்பனை**

**- (நாலடியார்-96)**

நாலடியாரில் இடம் பெற்ற இப்பாடல் ஈகைக் குணம் உடையவர்கள் ஊரின் நடுவே பலரும்

அணுகிப் பயன்பெறும் பெண்பனை மரம் போன்று பலருக்கும் பயன்படக்கூடியவர்களாக இருப்பார்கள். எவருக்கும் ஈயாதவர்கள் சுடுகாட்டில் உள்ள ஆண்பனையை போன்று அணுக இயலாகவர்களாக இருப்பார்கள் என்ற கருத்தை பனை மரங்களின் இயல்புகளை மக்களின் பண்புக்கு உவமையாக்கும் மாண்பு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**விருந்தோம்பல்**

தமிழருக்கு உரிய சிறந்த பண்பு என்பது விருந்தோம்பலேயாகும். இத்தகைய உயரியப் பண்பானது அன்பு நிறைந்த வாழ்க்கை மேற்கொள்பவரால் மட்டுமே சிறந்ததொரு விருந்தோம்பலை மேற்கொள்ள முடியும் என்ற கருத்தை

**இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு**

**- (குறள்-81)**

இக்குறளில் வள்ளுவர் மனைவியோடு சேர்ந்து இல்லற வாழ்க்கை வாழ்வது, வீட்டிற்கு வரும் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதற்குத்தான் என்று கூறிய இதே கருத்தை இளங்கோவடிகளும் கூறியுள்ளார்.

**அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை**

**(கலைக்களக் கதை 71. -73 )**

சிலப்பதிகார கொலைக்கலக் காதையில் கண்ணகிபுலம்புவதாக சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் படைத்துள்ளார் . கோவலன் கண்ணகி வாழ்க்கையில், கோவலனை விட்டு பிரிந்து வாழ்ந்த காலங்களில், தான் கணவனோடு சேர்ந்து செய்ய இயலாது இழந்த அறச்செயல்களை நினைத்து வருந்துவதாக கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு இல்லற வாழ்க்கைக்கு முக்கியமானதாக எவை எவை என்பதை கண்ணகி மூலம் விளக்குகிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

- தன்னைத் தேடிவரும் விருந்தினரை போற்றுபவனது வாழ்க்கை ஒருபோதும் கெட்டுப்போகாது.
- அமிழ்தமேயானாலும் விருந்தினர் புறத்தே விட்டு தான் உன்பது விரும்பத்தகாத செயல்.
- தன்னை தேடிவந்த விருந்தினரை முகம் மலர்ந்து வரவேற்றுக் காப்பவன் வீட்டில் திருமகள் மனமுவந்து தங்கியிருப்பாள்.
- உண்டு சொல்லும் விருந்தினரை உபசரித்த பின் இனிவரும் விருந்தினரை எதிர்ப்பவனை, தேவர்கள் தங்கள் விருந்தினராக எதிர்பார்ப்பர்.
- விருந்தினரைப் பேணி, அதன் பயனை அடையாதவன் பின்னாளில் தங்கள் கடமையைச் செய்யவில்லையே என்று வருந்துவார்கள்.

போன்ற கருத்துக்கள் இல்லறத்தின் மூலம் நடைபெறும் விருந்தோம்பலுக்கு வள்ளுவர் கூறும் அறநெறிகளாகும். இதேபோன்ற கருத்து மற்றொரு அறநூலில்

**இன்சொல், அளவால், இடம்,**
**இனிதூண்யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல் மென்சொல்**
**முருந்தேய்க்கும் முள்போல் எயிற்றினாய் நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து**

**- (ஏலாதி - பா- 7)**

கணிமேதாவியார் இயற்றிய ஏலாதி என்னும் அறநூலில் விருந்தினரை எவ்வாறு உபசரிக்க வேண்டும் என்பதை

- இன்சொல் பேசல்
- எல்லாரோடும் அளவளாவள்
- இருக்குமிடத்தில் இனிதாகும்படி அனைவருக்கும் இனிய உணவு வழங்கல்
- வற்புறுத்தும் வன் சொல்லைக்களைந் தெறிதல்
- பகுத்துக் கொடுத்தல்
- மென்மையாக பேசுதல்

இவை அனைத்தையும் தன்னகத்தே கொண்டவனை வானுலகத் தேவர்கள் விரைந்து வந்து விருந்தினனாக ஏற்றுக் கொள்வர்.

**இல்லறத்திற்கு அடிப்படை**

ஒரு சிறந்த இல்லத்திற்கு எப்படி ஈகை சிறந்ததாக கருதப்படுகிறதோ அதுபோல, இல்லற வாழ்க்கைக்கு மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது பொறையுடைமை ஆகும்.

**நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது**
**தாரிந் திருத்தல் தகுதிமற்(று) ஒரும்**
**புகழ்மையாக் கொள்ளாடு பொங்குநீர் ஞாலம்**
**சமழ்மையாகக் கொண்டு விடும்**

**- (நாலடியார் -72)**

இந்தப்பாடல் வரிகளில் தமக்கு நிகரில்லாதவர்கள் பண்பில்லாத வார்த்தைகளைக் கூறினால் அதைப் பொறுத்துக் கொண்டிருப்பதே நற்குணமாகும். அப்படி பொறுத்துக் கொள்ளா விட்டால், அச்செயலை உயர்ந்தோர்கள் இகழாகவே கருதுவர்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வாரைப் பொறுத்தல் தலை**

**- (குறள்-151)**

இக்குறளில் வள்ளுவர் தன்னைத் தோண்டு பவரையும் தாங்கி நிற்கின்ற நிலத்தைப்போலத் தன்னை இழித்துப் பேசுவோரைப் பொறுத்துக் கொள்வது சிறந்த பண்பாகும்

**இல்லத்தரசியின் பண்பு நலன்கள்**

இல்லாள் என்ற சொல் இல்லத்தை ஆளும் தன்மையுடையவள் என்பதை விளக்குகிறது. அப்படி இல்லத்தை ஆளும் பொறுப்பினைப் பெற்ற பெண்ணிற்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களை அற இலக்கியங்கள் எவ்வாறு விளக்குகின்றன என்பதற்கு வாழ்க்கை துணை நலம் என்றும் அதிகாரத்தில் வள்ளுவரும், மற்றொரு நூலான சிறுபஞ்சமூலத்திலும் இல்லத்தரசியின் சிறப்புக்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனை மாட்சித்தாயினும் இல் - (குறள்-52.)**

வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தில் வள்ளுவர், ஒரு இல்லத்தரசியானவள் எத்தகையவளாகத் திகழ வேண்டும் என்பதற்கு சான்றாக கூறுகையில்,

- மனைவியானவள் இல்வாழ்க்கைக்கு ஏற்ற பண்புடன் கூடிய குணம் கொண்டவளாகவும், கணவனின் வருவாயறிந்து வாழ்க்கை நடத்துபவளாகவும் இருப்பவளே சிறந்த மனைவியாவாள்.
- அப்படி இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குணங்களை பெறாத மனைவியை கணவனாக பெற்றவன் வாழ்வில் சிறப்படையமாட்டான்.
- மனைவி பண்பு நிறைந்தவளாக இருந்தால் குடும்பத்தில் இல்லையென்று எதுவும் இல்லை, மாறாக இருந்தால் வேறு என்ன இருந்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை.
- கணவனை மட்டுமே தெய்வமாக வணங்குபவள் மழையை பெய் என்றாளும் பெய்யும்.
- கற்பு தவறாது தன்னையும். தன் கணவனையும் அவன் புகழையும் காப்பவளே சிறந்த பெண்ணாவாள்.

போன்றவை இல்லத்தரசிகளுக்குத் தேவையான நற்பண்புகளாக வள்ளுவரின் குறள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்**
**வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் திருவாக்குந்**
**தெய்வதையு மெஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு**
**செய்வதே பெண்டிர் சிறப்பு**

**- (சிறுபஞ்சமூலம்-42.)**

- கணவனின் வருவாய்க்குத் தகுந்தவாறு செலவு செய்ய வேண்டும்.
- சுற்றத்தார் கண்டு அஞ்சாதபடி வாழ வேண்டும்.
- சுற்றத்தாருடன் விருப்பம் கொண்டு வாழ வேண்டும்.
- விருந்தினரைப் பேண வேண்டும்.
- திருவை உண்டாக்கித் தரும் தெய்வத்தை எப்போதும் தெளிவுடன் வழிபட வேண்டும்.

இப்படி வாழ்வதே இல்லத்தரசிக்கு ஏற்ற பண்பு ஆகும் என்று சிறுபஞ்சமூல ஆசிரியர் காரியாசான் கூறுகிறார்.

**நன்மக்களால் ஏற்படும் சிறப்பு**

இல்வாழ்க்கையில் பெறவேண்டிய பல நட்பேறுகளுள் ஒன்று நன் மக்களைப் பெறுதல், அறிவறிந்த மக்களைப்போல் மற்றவை எதுவும் சிறப்புடையவையாக இருக்காது என்பது வள்ளுவர் கருத்தாகும். ஒரு குடும்பத்திற்கு நல்ல அணிகலன்களாக விளங்குவதாக வள்ளுவர் கூறுவது வீட்டிற்கு விளக்காக அமைவது பெண்கள்; பெண்களுக்கு நல்லியல்புகள் நிறைந்த மக்கள், இவையே நல்ல குடும்பத்திற்கு அணிகலன்களாகக் கூறுகிறார்.

**மனைக்கு விளக்கம் மடவாார் மடவார்**
**தமக்குத் தகைசால் புலவர்மனக்கினிய**
**காதல் புதல்வர்க்குக் கல்வியேகல்விக்கும்**
**ஓதிற் புகல்சால் உணர்வு.**

**- (நான்மணிக்கடிகை-105)**

என்று கூறும் நான்மணிக்கடிகை. தந்தை, தாய், மக்கள் போன்ற இவர்கள் கடமை இன்னதென எடுத்துக்காட்டுகின்றன. மக்களை கல்வியில் சி றந்த பெரியோர்களாக ஆக்குதல் தந்தைக்கு கடன் என்ற கருத்தை

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**

**(புறம்-312)**

என்ற புறப்பாடல் மூலம் பொன்முடியார் எனும் பெண்பாற்புலவர் கூறியுள்ளார். ஒரு தாய் தன் பிள்ளை சான்றோர்களால் புகழப்படும்போது அந்தக் குழந்தையை பெற்றபோது ஏற்பட்ட இன்பத்தை விட மிகுதியாக இருந்ததாக

**ஈன்றபொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்டத் தாய் - (குறள்-69)**

இந்தக் குறள் மூலம் வள்ளுவர் விளக்குறார். ஒரு தந்தை மகனுக்கு ஆற்றும் கடமை குறித்து வள்ளுவர் கூறுகையில்,

**தந்தை மகற்கு ஆற்றும்நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல் - (குறள்-67)**

என்ற குறள் மூலமும், தம்மைவிட தம் மக்கள் அறிவடையவர்களாகத் திகழ்வது இந்த உலகின் இன்பம் பயப்பதாகவும்,

**"பிள்ளை தந்தைக்குச் செய்யும் உதவி என்னவென்றால் இவனைபெற இவன் தந்தை என்னதவம் செய்திருப்பானோ என்று புகழும்படி வாழ்வதாகும்".**

போன்ற அறக்கருத்துக்களால் இல்வாழ்க்கையில் ஈடுபடும் இல்லறமாந்தர்கள் ஒருவர் ஒருவருக்காக வாழ்வதே அறம். அதுவே இல்லற அறம் எனக் கூறுகிறார் அற நூலார்.

**முடிவுரை**

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**

**- (குறள்-41)**

என்ற குறளின் மூலம் வள்ளுவர் இல்லறத்தை மேற்கொள்பவன் தான் அறவழியில் உள்ள பிரம்மச்சாரி, தேவர்கள், துறவி ஆகிய மூன்று வகையார்க்கும் சிறந்ததொரு வழித் துணையாவான் என்று கூறுகிறார். ஆனால் தற்காலத்தவர்கள் அறநூல்களைப் பயில்வதும், பாடமாக வைப்பதும் பயன்படுத்துவதும் இன்று குறைந்துவிட்டது. வாழ்க்கையின் நிலை கெடும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தக்க அறிவுரை அளித்துக் காக்கக் கூடியவை அற நூல்கள். இந்த அற நூல்கள் நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை அப்படி அவர்கள் தங்களின் இல்லற வாழ்வில் வாழ்ந்த அனுபவ வாழ்வையே அறநூல்கள் மூலமாக, இல்லறத்தார் பின்பற்றக் கூடிய அன்பு, அடக்கம், ஈகை, கொடை, விருந்தோம்பல், மக்கள் பேறு மற்றும் நீதி நூல்களில் சொல்லப்பட்ட இல்லறத்தார் பின் பற்றக்கூடிய அனைத்தையும் அறவழியில், அறநூல்கள் மூலம் ஆராய்ந்து உருவாக்கப் பட்டதே இந்த கட்டுரையாகும். இந்தக் கட்டுரையின் மூலம் நிகழ்கால மக்களின் இல்லற வாழக்கைக்கு உறுதுணையாகவும், தூண்டு கோலாகவும் அமையப்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இல்லறம் என்பது துறவறத்திற்கு வழிகாட்டுதலாகவும், பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு தன்னலம் மறந்து பிறர்நலம் பேண தூண்டுகோலாகவும் அமையும் வாழ்வு இல்லற வாழ்வே சிறந்த வாழ்வாகும் என்பது அறநூல்கள் வழியாக ஆராயப்பட்டுள்ள அற இலக்கியங்கள் காட்டும் இல்லறம் என்ற இந்தக்கட்டுரை ஒரு சான்றாக அமைந்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. பேராசிரியர்-முனைவர்.ந.சுப்புரெட்டியார் - தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை - தேன்மழைப் பதிப்பகம் - 34, கொத்தவால் தெரு, சென்னை-16.
2. முனைவர் இரா. பரமேஸ்வரி - திருக்குறள், ஸ்ரீகோமதி பதிப்பகம் - சென்னை-5.
3. முனைவர். அ. ஜான்போஸ்கோ - எட்டுத்தொகை நூல்களில் அக இலக்கியங்கள் காட்டும் பெண்களின் நிலைப் பாடுகள் E.ISSN & 2582-0397- சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ் Vol &11, SPL ISSN&1 August & 2023 பக்கம் 64-68
4. முனைவர் இரா ஜெய்சங்கர் - அறஇலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் இராஜா பப்ளிகேஷன் & ISSN & 2321 & 9848 & September -2023 திருச்சி.
5. ஜான்சாமுவேல் - கலையும் கலைக் கோட்பாடும் சாரதா பதிப்பகம்.
6. இ, ஆக்னஸ் மேரி கிறித்துவ இலக்கியங்கள் E.ISSN & 2582-0397-சான்லாக்ஸ் ஆய்விதழ் Vol & 11, SPL ISSUE & 2 July & 2023 பக்கம் 126-129.
7. க. பிரகாஷ் - இல்லறம் கூறும் அறிவியல் கோட்பாடு - பாரதியார் பல்கலைக்கழகம் - கோயம்புத்தூர்-46.
8. தமிழ் இணையக் கல்விக்கழகம் tamilvu.org
9. முனைவர் அ. ஜான்போஸ்கோ - கிறிஸ்துவ இலக்கியங்கள் E.ISSN & 2582 - 0397 - சான்லாக்ஸ் ஆய்விதழ் Vol & 11, SPL ISSN & 1 July & 2023 பக்கம் 58-63.
10. மு.ரேவதி பாரத் ஸ்ரீஇராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் eluthu.com நாலடியார் காட்டும் அறம்.
11. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் டாக்டர் உ வே சா . நூல் நிலையம் நே .2 . பெசன்ட் நகர். சென்னை.